**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.**

**STC. No. 419 of 2020**

**மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1**

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 14–ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகராஜ் | **தொழில்** | |
| **த/பெ(அ) க/பெ.** | | **வயது** | |
| **கிராமம்** | | | |
| **தாலூக்கா** | | | |

நாள்: 14.07.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

01.04.2019 முதல் 31.03.2020 வரையிலான முழு கணக்கு பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பரிவர்த்தணைக்குண்டான மாத கணக்கு பதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள கணக்கு பதிவேட்டில் வங்கி அலுவலரின் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி தங்களுடைய வங்கி கணக்கில் தாங்கள் கொடுத்த தொகையை திருப்பி செலுத்திவிட்டார் என்றும், என்னுடைய வங்கி கணக்கின் பதிவேட்டை முழுவதுமாக தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரியவரும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வருமான வரி கணக்கில் எதிரி கடன் தர வேண்டிய விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இந்த கணக்கில் குறிப்பிடவில்லை. பொதுவாக தர வேண்டிய பாக்கி தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிக்கு வங்கி மூலமாக தான் பணம் கொடுத்தேன் என்ற விபத்தை குறிப்பிட்டு சட்ட அறிவிப்பிலும், புகாரிலும், சாட்சி விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு கொடுத்த வழக்கு காசோலையில் எதிரியின் கணக்கு எண். 2655111000007733 குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கு எண் நான் தாக்கல் செய்துள்ள கணக்கு பதிவேட்டில் எதியினுடைய

வங்கி கணக்கு எண்ணிற்கு Transfer செய்யப்பட்டதாக குறிப்பிட்டு காணவில்லை என்று சொன்னால் M.Prakash என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வேறொரு நபருக்கும் பணம் அனுப்பி உள்ளேன் என்றும், எதிரிக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. வங்கியில் அனுப்பி இருந்தால் புகாரிலும், அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றும், தற்போது பின் யோனை செய்து ஆவணம் தாக்கல் செய்தள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்னால் தயாரிக்கப்பட்டது என்றும், எதிரிக்கும் ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் காசோலையில் எதிரியின் கையொப்பமும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரம் பேனா மை மாறுபட்டு காணப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. எதிரி தான் காசோலையை நிரப்பி கொடுத்தார். காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது என்றும், வாசகங்கள் எல்லாம் என்னால் பூர்த்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் குறிப்பிட்ட தேதியில் காசோலை என்னிடம் கொடுக்கவில்லை என்றும், சீட்டு பணத்திற்காக கொடுக்கப்பட்ட காசோலையை தயாரித்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை**

**Sd/– Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**